# விரால் வளர்ப்பு

விரால் மீன் நன்னீரில் வாழும் தன்மையுடைய மீன் இனமாகும். இம்மீன் உள்நாட்டு மீன் இனங்களில் கெண்டை மீன்களை விட, முள் குறைந்த, சுவை மிகுந்த உணவாகும். எனவே, இது அதிக விலை மதிப்புள்ளதாக உள்ளது.விரால் மீனின் தோற்றம் உருண்டை வடிவமாக நீண்ட உடலைப் பெற்றிருக்கும். தலை பாம்பின் தலையைப் போன்று இருக்கும்.



இம்மீன்கள் நீர்பாசி மற்றும் தாவரங்கள் நிறைந்த உள்நாட்டு நீர் நிலைகளான ஏரி குளம், குட்டை போன்றவைகளில் காணப்படும். தற்போது விரால் மீன்குஞ்சுகள் வளர்ப்பு குளங்களில் இருப்பு செய்து வளர்த்தெடுத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### விரால் மீன் இனங்கள்

விரால் மீன் இனங்களில் சில வகை இனங்களே மிக நீளமாவும். எடையுள்ளதாகவும் வளருகின்றன. அவைகள் சென்னா என்ற வகைகளை சார்ந்ததாகும். அவைகளின் பெயர்கள்

1. சென்னா ஸ்டிரையேட்டஸ்
2. சென்னா மருலியஸ்
3. சென்னா பங்க்ட்டேட்டஸ்

### மீன் குஞ்சுகள் சேகரிப்பு மற்றும் உற்பத்தி

விரால் மீன்குஞ்சுகள் இயற்கையான முறையில ஆற்றோரங்களில் குளம், குட்டைகளின் ஓரங்களில் சேகரம் செய்து விற்கப்படுகின்றன. (1000 எண்ணிக்கை ரூ.1500/-) செயற்கையான துாண்டுதல் முறையில் ஊசி மூலம் பிட்யூட்டரி அல்லது ஓவாபிரிம் செலுத்தி இனச்சேர்க்கை ஏற்படுத்தி மீன்குஞ்சுகை உற்பத்தி செய்யலாம். இதற்காக ஆராய்ச்சிகள் மத்திய நன்னீர் மீன்வள ஆராயச்சி மையத்தில் விரால் இனப் பெருக்கம் மற்றும் வளர்ப்பு குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. இத்துறையிலும் இது குறித்த ஆய்வுப் பணிகள் துவங்கிட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இன்னும் வியாபார அளவில் உற்பத்தி செய்யப்படவில்லை.

### தூண்டுதல் முறை உற்பத்தி

இம்முறையில், வளர்ந்து பருவடைந்த 1 கிலோ 2 கிலோ எடையுள்ள விரால் மீன்களை சேகரம் செய்து "ஹப்பா" என்று சொல்லப்படும் கொசுவலை கூண்டுகளில் விட்டு அவற்றுக்கு பிட்யூட்டரி அல்லது ஓவாபிரிம் என்று சொல்லப்படுகின்ற

மருந்து ஊசி மூலம் உணர்வுகளை தூண்டி இனச் சேர்க்கை ஏற்படுத்தி. முட்டைகளை இட வைக்கப்படுகின்றது பின்னர் இம்முட்டைகளை "ஹேட்சிங் ஹப்பா" என்று சொல்லப்படும் துணியிலான பொறிக்கும் கூண்டுகளில் போட்டு வைத்தால் 2 அல்லது 3 நாட்களில் குஞ்சுகள் பொறிக்கும்.

இவைகளை சிறிது காலம் முடிவடைந்தவுடன் மிக பாதுகாப்பாக சேகரம் செய்து சிறு சிறு தொட்டிகளில் இருப்பு செய்து வளர்த்து வர வேண்டும். பின்னர் இவற்றை சேகரித்து பாலிதீன் பைகளில் பிராணவாயு விட்டு அடைத்து விற்பனைக்கு வழங்கலாம். பெரிய குளங்களில் இருப்ப செய்யலாம்.

விரால் மீன்குஞ்சு உற்பத்தி கெண்டை மீன் குஞ்சுகள் போன்றே தான் என்றாலும். கூடுதல் கவனமும். பாதுகாப்பும் தேவை. காரணம் விரால் மீன்குஞ்சுகள் மிகவும் மென்மையானவை மட்டுமல்லாமல் "யோக் சேக்" எனப்படும் உணவுப் பை மீன்குஞ்சுகளில் உடலுடன் ஒட்டி வெளிப்புறம் காணப்படும். இதுவே மீன்குஞ்சுகள் உணவாக உதவுகிறது. இது சுருங்கி முழுவதுமாக மறைந்த பின்னரே மீன்குஞ்சுகள் தண்ணீரில் இயற்கையாக உள்ள உணவாகிய நுண்ணுயிர்களை சாப்பிட முடியும். அதுவரை உணவு எடுக்க முடியாமையினால் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும்.

**மீன் வளர்ப்பு**

நன்கு வளர்ந்த விரால் மீன் குஞ்சுகளை பெரிய வளர்ப்புக் குளங்களில் எக்டேருக்கு 5,000 வீதம் இருப்பு செய்யலாம். இருப்பு செய்வதற்கு முன்னர் இக்குளங்கள் முன் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். அதாவது குளங்களில் உள்ள பழைய நீரை அப்புறப்படுத்தி, உழுது காய வைக்க வேண்டும். பின்னர் சுண்ணாம்பு எக்டேருக்கு 200 கிலோ வீதம் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். பின்னர் ஓரளவு தண்ணீர் விட்டு மாட்டுச் சாணம் எக்டேருக்கு 2000 கிலோ கரைத்து குளத்துக்குள் தெளிக்க வேண்டும். பின்னர் ஒரு மீட்டருக்கு குறையாமல் நீர் ஏற்ற வேண்டும். மீன் குஞ்சுகள் இருப்பு செய்வதற்கு 2 அல்லது 2 தினங்களுக்கு முன், மேற்குறிப்பிட்ட முன் ஏற்பாடுகளை செய்து கொண்டால் அக்குளத்து நீரில் நுண்ணுயிர்கள் வளர்ந்து, மீன் குஞ்சுகளுக்கு ஏற்ற இயற்கை உணவாகும் வகையில் குளம் தயார் நிலையில் இருக்கும். இந்த சமயத்தில்தான் மீன்குஞ்சுகளை காலை அல்லது மாலை வேளையில் இருப்பு செய்யப்பட வேண்டும்.

**மீன்குஞ்சுகளுக்கு உணவிடுதல்**

விரால் மீன்குஞ்சுகளுக்கு இயற்கையாக நீரில் உள்ள நுண்ணுயிர்களும் சாணம் போன்றவைகளால் உண்டாகும் நுண்ணுயிர்களும் போதாது. எனவே, கூடுதலாக உணவு தேவைப்படும். இதற்காக திலேபியா, கம்பூசியா, ஒரிசியாஸ், அப்போகிலஸ் போன்ற அதிக இனப்பெருக்கம் ஏற்படுத்தும் வகையிலான சிறு மீன்களை ஹெக்டேருக்கு 1000 வரை விட வேண்டும். மேலும் குளத்தில் பூச்சிகள் விழும் வகையில ஒளி விளக்குகள் அமைத்து வைத்தால் இரவு நேரங்களில் மிக அதிகமான அளவில் பூச்சிகள் விழுந்து அவைகளும் விரால் மீன்களுக்கு உணவாகும். செயற்கை உணவாக மீன் உணவு கொடுத்து செயற்கை உணவை எடுத்து வர பழக்க வேண்டும்.

## வளர்ப்பு கால கவனிப்பு

வளர்ப்பு காலத்தில் குளத்து நீர் அளவு உணவிடுதல் இரவு காவல் ஆகியவற்றில் கவனத்தோடு கண்காணித்து வர வேண்டும்.

10 அல்லது 15 தினங்களுக்கு ஒரு தடவை சோதனை மீன்பிடிப்பு செய்து வளர்ச்சியினை கண்டு குறிப்பிட்டு வர வேண்டும். புண் அல்லது நோய் ஏதும் மீன்களுக்கு கண்டிருந்தால் உடனே சிஃபேக்ஸ் என்னும் மருந்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். 1 ஹெக்டேர் பரப்பளவு உள்ள 1 மீட்டர் ஆழமுள்ள குளத்திற்கு 100 மி.லிட். அளவில் இம்மருந்தை 1:100 அளவில் தண்ணீருடன் கலந்து குளம் முழுமைக்கும் தெளிக்க வேண்டும். அதிக அளவில் மீன் பாதிக்கப்பட்டிருந்தால் அம்மீனை அப்புறப்படுத்தி வெளியே மண்ணைத் தோண்டி புதைக்க வேண்டும்.

ஏறத்தாழ 10 மாதம் முதல் ஒரு வருடம் வரை வளர்த்து வந்தால் 600 கிராம் எடையுள்ள மீன்கள் கிடைக்கும்.

## மீன்கள் அறுவடை

10 மாதங்களுக்குப் பின்னர் ஒரு மீன் 600 கிராமுக்கு மேல் வளர்ச்சியடைந்தால் விற்பனைக்கு ஏதுவாக அறுவடை செய்ய பணிகளை துவக்கலாம். மீன்கள் விற்பனைக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்து கொண்டு பின்னர் குளத்தின் நீரை குறைத்து இழுவலை. வீச்சுவலை கொண்டு பிடிக்கலாம். கடைசியில் தடவல் முறை மூலமாக மொத்த மீன்களையும் பிடித்து வேறு குளத்தில் “வெலான் ஸ்க்ரீன் ஹப்பா”-களில் போட்டு வைக்கலாம். காரணம் விரால் மீனைப் பொறுத்த வரையில் இறந்த மீனைக் காட்டிலும் உயிருள்ள மீன் விலை மதிப்புள்ளது. தற்போது ஒரு கிலோ மீன் ரூ.100/- வரையில் மீன் அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றது. எல்லா உள்நாட்டு மீன்களையும் விட விரால் மீன் விலை அதிகமாக உள்ளது.

விரால் மீன்களின் மொத்த இருப்பாக 5,000ல் 60% கிடைத்தாலும் 1,800 கிலோ மீன்கள் அறுவடை மூலம் கிடைக்கும். இதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.80/- விற்பனை செய்தாலும் ரூ.1,44,000/-க்கு விற்பனை மூலம் வருவாய் கிடைக்கும். ஒரு ஆண்டு வளர்ப்புக்கான செலவு ரூ.70,000/- போக மீதி ரூ.74,000/- நிகர லாபம் கிடைக்கும்.

## பெருரக கெண்டை மீன்களுடன் வளர்ப்பு

பெருரக கெண்டை மீன்களுடன் சேர்த்தும் விரால் மீன்களை வளர்க்கலாம். இம்முறையில் பெருரக கெண்டைகளான கட்லா, ரோகு, மிர்கால், புல்கெண்டை, வெள்ளிக்கெண்டை ஆகியவைகளுடன் வளர்க்கும் இக்கெண்டை மீன்கள் குறைந்தது கால் கிலோ அளவில் பெரிதாக வளர்த்திருக்க வேண்டும். எனவே, கெண்டை மீன்குஞ்சுகளை ஹெக்டேக்கு மிக குறைந்த அளவில் சுமார் 100-150 வரை மட்டுமே இருப்பு செய்ய வேண்டும். இதனால் பெருரக கெண்டைகளுக்கு எதிராக உள்ள சிறு ரக கெண்டை மீன்களை அழிப்பதோடு உற்பத்தி அளவிலும் மீன்கள் சற்று கூடுதலாக கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும்.